பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 13 திங்கட்கிழமை 29.09.2025 கதிர் 323

## இது ரகசியம் அல்ல!

ஜப்பானில் இருந்து அரசுத் தலைவர் அநுரகுமார நாடு திரும்பியதும் தமிழ் அரசுக் கட்சியுடன் பேசுவதற்கு நாள் குறிக்கப்படும் என்று அமைச்சர் சந்திரசேகரன் ☞ 2

# நிலக்கரி கொள்முதல் கேள்வி கோரலில் குறித்த ஒரு நிறுவனத்திற்காக மோசடி?

### சந்தேகம் கிளப்புகிறார் புபுது ஜெயகொட

மின் உற்பத்திக்கான நிலக்கரி கேள்விக்கோரலின்போது ஆளும்தரப்பு பின்பற்றிய தகுதிகளைப் பார்க்கும்போது, குறித்த ஒரு நிறுவனத்துக்கு வழங்கும் நோக்கில் கொள்முதல் வழிகாட்டல் மீறப்பட்டுள்ளதா என்ற சந்தேகம் எழுகிறது என முன்னிலை சோசலி கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

பொலன்னறுவை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின் உற்பத்திக்கான நிலக்கரி விநியோக கேள்விக்கோரல் கடந்த 15ஆம் திகதி பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தது. அந்த கேள்விக்கோரலின் ஆகக்குறைந்த கேள்வித்தொகையை சமர்ப்பித்த குறித்த நிறுவனத்துக்கு அது உரித்தானது. என்றாலும் நிலக்கரி விநியோக கேள்விக்கோரலின்போது,




பின்பற்றிய தகுதிகளை பார்க்கும்போது, இந்த கேள்விக்கோரல் குறித்த அந்த நிறுவனத்துக்கு வழங்கும் நோக்கிலே கொள்முதல் வழிகாட்டலை மீறியுள்ளதா என்ற சந்தேகம் எழுகிறது.

அத்துடன் குறித்த நிறுவனத்தின் ☞ 8

# போதைப் பொருளுடன் தொடர்புபட்ட மேலும் 72 பேரைத் தேடி பெரு வேட்டை

### வெளிநாடுகளில் உள்ளவர்களும் அடக்கம்

உள்நாட்டில் மாத்திரமின்றி வெளிநாடுகளிலிருந்தும் இலங்கையில் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ள 72 சந்தேகநபர்களில் 32 சந்தேகநபர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்பதும் இனங்காணப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களை சனிக்கிழமை சந்தித்து போதைப்பொருள் ஒழிப்பு திட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் ஓரிரு வாரங்களில் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பில் தேசிய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. உள்நாட்டில் மாத்திரமின்றி வெளிநாடுகளிலிருந்து இலங்கையில் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ள 72 சந்தேகநபர்களில் 32 சந்தேகநபர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்பதும் இனங்காணப்பட்டுள்ளது.

# எமது ஒவ்வொரு சொத்துக்கும் எம்மால் பொறுப்புக்கூறமுடியும்

### சுகாதார அமைச்சர் இறுமாப்பு

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பிலுள்ள அமைச்சர்களின் சொத்து விவரங்கள் எதிர்க்கட்சிகளால் தேடி கண்டுபிடிக்கப்பட்டவையல்ல. அவை நாமாக ☞ 2

# தங்காலைக்குச் சென்று மகிந்தவை நேற்று நேரில் சந்தித்தார் ரணில்



முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தங்காலையிலுள்ள கால்டன் இல்லத்துக்கு சென்று முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்சவை சந்தித்துள்ளார். நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கதிர்காமத்தில் இருந்து கொழும்புக்கு செல்லும் வழியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக ஐக்கிய தேசிய கட்சியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, தான் சிறையில் இருந்த காலத்தில் மகிந்த ராஜபக்ச ஆற்றிய பங்களிப்பிற்காக முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவருக்கு நன்றியைத் தெரிவித்துள்ளார். ☞ 8

# மன்னாரில் இன்று பொது முடக்கம்

### போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலை கண்டித்து

மன்னார் மாவட்டத்தில் இன்று திங்கட்கிழமை பொது முடக்கத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் காற்றாலைத் திட்டத்தைத் தொடரும் ஆளும்தரப்பின் முடிவுக்கு எதிராகவும் அதை எதிர்த்துப் போராட்டம் நடத்தியவர்கள் மீது பொலிஸார் நடத்திய தாக்குதலைக் கண்டித்துமே இந்தப் பொது முடக்கத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

'மன்னார் மாவட்ட ☞ 2

# பாதாளக் குழுக்களுக்காகச் செயற்பட்ட நிர்வாகக் கட்டமைப்பையே ஒழிப்பேன்

### அரசுத் தலைவர் ஜப்பானில் சூளுரை

பாதாள குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்களுக்காக செயற்பட்ட அரச நிர்வாக கட்டமைப்பை முழுமையாக இல்லாதொழிப்பேன். பல உண்மைகள் வெளிவரும் போது அரசியல்வாதிகள் பலர் கலக்கமடைந்துள்ளார்கள் என அரசுத் தலைவர் அநுரகுமார தெரிவித்தார்.

ஜப்பானிய ஆளும்தரப்பின் அழைப்பின் பேரில் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ☞ 8

# காற்றாலைத் திட்டத்தை இடைநிறுத்தி ஆளும்தரப்பு மக்களுடன் பேசவேண்டும்

### மனோ கணேசன், காவிந்த எம்.பிக்கள் வலியுறுத்து

மன்னார் காற்றாலைத் திட்டத்தை ஒருமாதத்துக்கேனும் இடைநிறுத்தி மன்னார் மாவட்ட மக்களுடன் அரசுத் தலைவர் நேரடியாக ☞ 2

# நீதிக்கான பட்டினிப் போராட்டம் திருக்கோவிலிலிலும் தொடக்கம்






(சகாதேவராஜா)

நீதிக்கான சுழற்சி முறையிலான பட்டினிப் போராட்டம் வடக்கில் செம்மணி கடந்த நான்கு நாள்களாக இடம்பெற்று வரும் ☞ 8

# மன்னார் போராட்டத்தில் அரசியல் காய் நகர்த்தல்

### அமைச்சர் சந்திரசேகரன் குற்றச்சாட்டு

இன்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் காற்றாலை மின்நிலையம் அமைப்பது தொடர்பாக பெரும் பிரச்சனையை ஏற்பட்டுள்ளது. சனிக்கிழமை அதிகாலை கற்றாலைக்கான உபகரணங்களை வாகனங்களில்



கொண்டு வரும்போது பிரதேச ☞ 2

## இனி இது .....

நேற்று யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார். மன்னாரில் காற்றாலைக்கு எதிராகப் போராடும் மக்கள் மீது பொலிஸார் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதல் நடத்தியது தொடர்பில் உரையாடுவதற்காக செய்தியாளர்களை அழைத்திருந்த அவரிடம் செய்தியாளர்கள் தமிழ் அரசுக் கட்சி அரசுத் தலைவருக்கு எழுதிய கடிதம் குறித்துக் கேட்டபோது இந்தப் பதிலை வழங்கினார்.

வெளிநாடு சென்றிருக்கும் ஒரு தலைவர் நாடு திரும்பிய பின்னர்தான் உள்நாட்டு விவகாரங்கள்தொடர்பில்கவனம்செலுத்துவார் என்கிற பொது நிலைப்பாட்டின் அடிப்படையில் அமைந்ததே அமைச்சரின் கருத்து. அதைத் தவிர்த்து அந்தக் கருத்தில் எந்தச் சிறப்பம்சமும் இல்லை. தமிழ் அரசுக்கட்சியின் கடிதம் குறித்து அவசரமாகப் பதிலளிக்கும் நிலைப்பாட்டில் அரசுத் தலைவர் இருக்கவில்லை என்று கொழும்பில் ஆளும்தரப்பு வட்டாரங்கள் உறுதியாகக் கூறுகின்றன.

அரசுத் தலைவரிடமிருந்து பேச்சுக்கான அழைப்பு வரலாம் என்கிற எதிர்பார்ப்பில் மன்னார் பிரச்சினையிலும் தமிழ் அரசுக் கட்சி அமைதி காத்து வருவதாகக் கூறப்படுகின்றது. ஆனால், அந்தக் கட்சியுடன் பேசுவதில் உடனடியாக எந்த அவசரத்தையும் அநுர காட்டவில்லை என்பதே உண்மை.

.........................................

ஊழலின் அடிநாதம் அரசியல்வாதிகள் மட்டுமல்லர் என்பது உலகறிந்த உண்மை. அதிகார வர்க்கத்தின் முதுகெலும்பான அரச உயரதிகாரிகளுமே ஊழலின் சூத்திரதாரிகள். எனவே இவர்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆளும்தரப்பு மெல்ல மெல்ல இறுக்கி வருகின்றது.

ஏற்கனவே காணக்காய்வாளர் நாயகத்திற்கான அதிகாரங்களைப் பலப்படுத்தி ஒரு சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றில் நிறைவேற்றியுள்ளது. அதன்படி இனிமேல் கணக்குகளில் பெரும் முறைகேடுகள் இருப்பதை கணக்காய்வாளர் நாயகம் கண்டறிந்தால், அதற்குப் பொறுப்பான அதிகாரி மீது சட்ட நடவடிக்கை எடுக்கும்படி அவர் நேரடியாகவே பொலிஸாருக்கு உத்தரவிடும்அதிகாரத்தைப்பெற்றிருக்கின்றார். இதுவரையான காலமும் அப்படி நடவடிக்கை எடுக்க உத்தரவிடும் அதிகாரத்தை சட்டமா அதிபர் திணைக்களம்தான் கொண்டிருந்தது. இப்போது அது கணக்காய்வாளர் நாயகத்தின் கைகளுக்குச் சென்றுள்ளது.

இப்போது மற்றொரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து பிடியை மேலும் இறுக்குவதற்கான முயற்சிகளை ஆளும்தரப்புத் தொடங்கிவிட்டது. அதன்படி கோப் எனப்படும் பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழு மற்றும் கோப்பா எனப்படும் பொதுக் கணக்குகள் தொடர்பானநாடாளுமன்றக்குழுஆகியவற்றின் ஆய்வுகளில் ஊழல் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகக்கூடிய அரச நிறுவனங்களின் அதிகாரிகள் மீது நேரடியாகப் பொலிஸாரை நடவடிக்கை எடுக்கக் கோரும் விதத்தில் நாடாளுமன்ற நிலையியல்கட்டளைகளைத்திருத்துவதற்கான முன்மொழிவு ஏற்கனவே நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

நிலையியற் கட்டளைகளில் முன்மொழியப்பட்ட திருத்தங்களை 'கோப்'தலைவரானஆளும்தரப்புநாடாளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீர மற்றும் 'கோப்பா'தலைவரான ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் ஆகியோர் முன்வைத்தனர்.

புதிய நிலையியற் கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்பட்டவுடன், 'கோப்'மற்றும் 'கோப்பா', கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகளை ஆராய்ந்து, கடுமையான நிதி மோசடி அல்லது ஊழல் நடந்திருப்பதாகக் கருதினால் அது குறித்து நிதிக் குற்ற விசாரணைப் பொலிஸ் திணைக்களத்திற்கு நேரடியாகப் பரிந்துரைக்கும்.

தற்போதுள்ள நிலையியற் கட்டளைகளின் கீழ், பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் 'கோப்'அல்லது 'கோப்பா'அறிக்கைகள் நிதியமைச்சர் மற்றும் விசாரணையில் உள்ள நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கு அனுப்பப்படுகின்றன. பின்னர் இந்த அமைச்சர்கள் எட்டு வாரங்களுக்குள் தங்கள் அவதானிப்புகளை நாடாளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கவேண்டும், குழுக்களின் பரிந்துரைகளுக்குஏற்ப, அவர்கள் எடுக்க முன்மொழியும் நடவடிக்கைகள் குறித்த அறிக்கையுடன். நாடாளுமன்றம் அவ்வாறு முடிவு செய்தால், அறிக்கைகள் பின்னர் சட்டமா அதிபருக்கு அவதானிப்புகள் மற்றும் மேலும் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்படலாம்.

இந்த செயல்முறையை விரைவு படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முன்மொழியப்பட்ட புதிய மாற்றங்கள் ஏற்கனவே நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இதற்கிடையில், புதிதாக நிறைவேற்றப்பட்ட தேசிய கணக்காய்வுச் (திருத்தம்) சட்டத்தின்கீழ் நிறுவப்படவேண்டிய ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட கூடுதல் நிதி மதிப்பாய்வுக் குழு இன்னும் நிறுவப்படவில்லை. இந்தக் குழு, நிதி மோசடியில் ஈடுபட்டனர் என்று கண்டறியப்பட்டவர்களுக்குக் கூடுதல் கட்டணமாக விதிக்கப்படும் அபராதங்களைத் தீர்மானிப்பதற்கும், கணக்காய்வாளர் நாயகத்தின் பரிந்துரைகளை மறுஆய்வு செய்வதற்கும் பொறுப்பாக இருக்கும்.

இந்தத் திருத்தங்களின்படி இனிவரும் காலங்களுக்கு மட்டுமே இந்தச் சட்டத் திருத்தங்கள் செல்லுபடியாகுமா அல்லது இதற்கு முன்னர் கண்டறியப்பட்ட மற்றும் கண்டறியப்படவேண்டிய நிதி மோசடிகளுக்கும் செல்லுபடியாகுமா என்பது இன்னும் தெளிவில்லை. முன்னர் நடந்த மோசடிகளுக்கும் செல்லுபடியாகுமெனில் வடக்கு கிழக்கில் உள்ள பல அதிகாரிகளுக்கும் முன்னாள் அதிகாரிகளுக்கும்கூட வில்லங்கம் காத்திருக்கின்றது..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மன்னாரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் இன்று திங்கட்கிழமை தமது அனைத்து செயற்பாடுகளையும் நிறுத்த வேண்டும், போக்குவரத்துச் சேவையை நிறுத்துவதுடன், வர்த்தக நிலையங்களையும் மூடி மாவட்டத்தை முடங்கச் செய்து எங்கள் போராட்டத்துக்கு வலுச் சேர்க்க வேண்டுகின்றோம்' - என்று மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மாக்கஸ் அடிகளார் அழைப்பு விடுத்துள்ளார்.

'அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றுவோரும் கடமைகளுக்குச் செல்லாமல் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்'- என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பொது முடக்கத்தின் மற்றொரு பகுதியாக கண்டனப் பேரணி ஒன்றும் இன்று இடம்பெறவுள்ளது. முற்பகல் 10 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இருந்து இந்தக் கண்டனப் பேரணி தொடங்கும். இந்தப் பேரணி மன்னார் பஜார் பகுதியை அடைந்து, அங்கு எதிர்ப்பு முழக்கங்கள் எழுப்பப்படும். மதியம் 1.30 மணி வரை இந்தப் பேரணி நடைபெறும். இறுதியாக, அரசுத் தலைவருக்கான கோரிக்கைகள் அடங்கிய மனு மன்னார் மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்படும் என்றும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர் எனவும் அதற்கு எதிராகப் பொலிஸார் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர் என்றும் செய்திகள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றது

இந்த விவகாரம் தொடர்பாக ஆளும்தரப்பில் உரிய தரப்புகளுடன் பேசப்பட்டது. தற்போது மின்சாரக கம்பங்களை நிறுவுவதற்குரிய குழிகள் தோண்டப்பட்டுள்ளது அவற்றை அமைப்பதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே அதனை அமைப்பதற்கு விடுங்கள் என மக்களை நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

போராட்டத்தை கட்டவிழ்த்து விட்டவர்கள், காற்றாலை மின்நிலையம் தொடங்கப்பட்டபோது அதனை திறந்து வைக்கும் நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்களாகவே இருக்கின்றார்கள். அந்த நிறுவனங்களோடு ஏதோ ஒரு வகையில் கொடுக்கல் வாங்கல்களைச் செய்தவர்கள் இன்றைக்கு இந்தப் போராட்டத்தின் பின்னால் இருக்கிறார்கள். போராட்டகாரர்கள் மன்னாரை மீட்டெடுப்போம் என போராட்டத்தை கட்டவிழ்த்து விட்டு இருக்கிறார்கள். ஆனால், மன்னாரை மீட்டெடுப்பதற்கு எங்களைத் தவிர வேறு யாரும் கிடையாது.

காற்றாலைக் மூலம் மன்னாருக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. மன்னாருக்கு அதிகளவான பாதிப்பை ஏற்படுத்துவது, கனியமணல் அகழ்வு. அதனை நாம் இப்போது நிறுத்தி இருக்கிறோம். இலங்கையில் இதற்கு முன்னர் அமைக்கப்பட்ட காற்றாலை மின் நிலையங்களைப் பாருங்கள் அங்கே மீன்கள் வரவில்லையா, பறவை இனங்கள் வரவில்லையா, உயிரினங்கள் வரவில்லையா இயற்கைக்கு எந்தவிதமான மாசு ஏற்பட்டு இருக்கின்றதா என்பதை தேடி பாருங்கள் அவ்வாறு மாசு ஏற்பட்டிருந்தால் அவ்வாறான தாக்கங்கள் ஏற்பட்டிருந்தால் அவை நிரூபிக்கப்படுமானால் நாங்களும்கூட உங்களோடு சேர்ந்து போராடுவதற்குத் தயாராக இருக்கிறோம்

கடந்த காலங்களில் மன்னாரில் காற்றாலை மின்நிலையங்கள் அமைக்கின்றபோது எதிர்ப்பு தெரிவிக்காதவர்கள் தற்போது எதிர்ப்பைத் தெரிவிப்பதிலிருந்து, இவர்களுக்குப் பின்னால் ஓர் அரசியல் காய் நகர்த்தல் இருக்கின்றது என்பது எமக்கு நன்கு புலப்படுகின்றது

இந்தப் பொறியியல் நீங்கள் சிக்க வேண்டாம் என்று மன்னாரில் உள்ள பொது மக்களைக் கேட்டுக்கொள்கின்றோம். இந்த பொறியானது உங்களுக்கு மட்டுமல்ல எதிர்கால சந்ததிக்கும் வைக்கப்பட்டுள்ள பொறி. உங்கள் பிரதேசத்துக்கான பொறி. உங்கள் பிரதேசத்துக்கு எந்த அபிவிருத்திகளையும் வராமல் தடுக்கின்ற பொறி. எனவே மன்னார் மக்கள் இவ்விடயத்தில் தெளிவாக இருக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம் - என்றார்.

## காற்றாலைத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க தயார். ஜனநாயக ரீதியிலான போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டமை வன்மையாக கண்டிக்கத்தக்கது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், காவிந்த ஜயவர்தன ஆகியோர் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், காவிந்த ஜயவர்தன இன்று (திங்கட்கிழமை) மன்னாருக்கு சென்று, மதத் தலைவர்கள், போராட்டத்தில் ஈடுபடும் பொதுமக்கள் உட்பட குடிமைச் சமூகத்தினரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதுடன், மன்னார் காற்றாலைத் திட்டத்துக்கு எதிரான போராட்டத்திலும் கலந்துக்கொள்ளவுள்ளனர்.

மன்னார் காற்றாலைத் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன் மற்றும் காவிந்த ஜயவர்தன ஆகியோர் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து இதனை வலியுறுத்தினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்ததாவது:

மன்னார் காற்றாலைக் கருத்திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜனநாயக ரீதியான போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது பொலிஸார் காட்டுமிராண்டித்தனமான முறையில் தாக்குதலை மேற்கொண்டுள்ளார்கள். பொலிஸாரின் செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கிறோம்.

இந்த சம்பவம் கடந்த காலங்களில் இடம்பெற்றிருந்தால் அரசுத் தலைவர் அநுரகுமார உட்பட ஆளும் தரப்பினர் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருப்பார்கள். மாற்றம் வேண்டும் என்று குறிப்பிட்டவர்களின் ஆட்சியில் இவ்வாறு இடம்பெறுவது ஆச்சரியமாகவுள்ளது.

மன்னார் காற்றாலைத் திட்டம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் உட்பட சிவில் தரப்பினர் அரசுத் தலைவருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்கள். இந்தத திட்டம் தொடர்பில் ஆராய்வதற்கு துறைசார் நிபுணர்களை மன்னாருக்கு அனுப்பி வைப்பதாகவும், மக்களின் எதிர்ப்புகளுடன் எந்த திட்டத்தையும் செயற்படுத்தப் போவதில்லை என்றும் அரசுத் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

மன்னார் காற்றாலைத் திட்டம் தொடர்பில் கொழும்பில் இருந்து துறைசார் நிபுணர்கள் எவரும் மன்னாருக்கு செல்லவில்லை. வலுசக்தி அமைச்சர் உட்பட ஒருசிலர் மாத்திரம் மன்னாருக்கு 'நாங்களும் சென்றோம்' என்பது போல் சென்று ஊடகங்களுக்கு பேசிவிட்டு கொழும்புக்கு வந்தார்கள். போராட்டத்தில் ஈடுபடும் மக்களுடன் எவ்வித பேச்சு நடத்தவில்லை.

காற்றாலைத் திட்டத்தை இடைநிறுத்து வதாக்கக்குறிப்பிட்டுக்கொண்டு திட்டப்பணிகளை இரவோடு இரவாக ஆரம்பிப்பதற்கு ஆளும்தரப்பு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்த பொதுமக்கள் மீது பொலிஸார் கடுமையாகத் தாக்கியுள்ளார்கள். இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு ஆளும்தரப்புக்கு வெட்கமில்லையா?

மன்னார் மாவட்டத்தில் பெரும்பாலானோர் மீனவர்கள், ஆகவே அவர்களுக்கு தவறிழைத்து நெருக்கடிக்குள்ளாக வேண்டாம் என்று ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறோம். இந்த திட்;டத்துக்கு அந்த பிரதேச மக்கள் ஏன் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என்று மக்கள் மத்தியில் இருந்து ஆளும்தரப்பு ஆராய வேண்டும்.

காற்றாலை மின்னுற்பத்தி திட்டத்தை ஒருமாதத்துக்கேனும் இடைநிறுத்தி மன்னார் மாவட்ட மக்களுடன் அரசுத் தலைவர் நேரடியாக பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு எதிர்கட்சியினர் என்ற அடிப்படையில் நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

நாட்டின் அபிவிருத்திக்கு தற்போதைய எதிர்க்கட்சி ஒருபோதும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. 75ஆண்டுகால அரசியலை சாபம் என்று சபிக்கும் ஜேவிபிதான் நாட்டின் அபிவிருத்திக்குச் சாபமாக செயற்பட்டது. ஆகவே அபிவிருத்தி திட்டங்கள் மக்களின் நன்மைக்காக அமைய வேண்டும். ஆகவே மன்னார் மாவட்ட மக்களுக்காக குரல் கொடுப்போம். போராட்டத்தில் ஈடுபடும் பொதுமக்கள் மீது கை வைப்பதை பொலிஸார் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டில் சகல பாகங்களிலும் உள்ள மக்களுக்காக குரல் கொடுப்போம். மன்னார் காற்றாலைத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள், மதத் தலைவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டமை வன்மையாக கண்டித்தக்கது.

அரசுத் தலைவர் அநுரகுமார அரசுத் தலைவர் தேர்தல் காலத்தில் மன்னார் மாவட்டத்துக்கு சென்று இந்த காற்றாலைத் திட்டம் பற்றி பேசியிருந்தார். மக்களுக்கு எதிராக அமையும் அல்லது மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் எவ்வித அபிவிருத்தித் திட்டங்களுக்கும் இடமளிக்கபோவதில்லை. தமது ஆளும்தரப்பில் மன்னார் காற்றாலைத் திட்டம் இரத்துச் செய்யப்படும் என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் தற்போது முறையற்ற வகையில் அந்த திட்டத்தை தொடர்வதற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

முன்னாள் அரசுத் தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆளும்தரப்பு ரதுபஸ்வெல சம்பவத்துடன் தான் வீழ்ச்சிக்கு சென்றது. ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது தாக்குதல் மேற்கொண்டமை வன்மையாக கண்டித்தக்கது. ஆளும்தரப்பின் சர்வாதிகாரமான செயற்பாட்டுக்கு எதிராக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றார்.

## எமது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வந்து சமர்ப்பிக்கப்பட்டவையாகும். எமது ஒவ்வொரு சொத்துக்களுக்கும் எம்மால் பொறுப்புகூறமுடியும். எனவே எதிர்க்கட்சிகளின் கூச்சல்களுக்கு நாம் கலவரமடையவில்லை என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

காலி - மாபலகம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது சொத்து விவரங்கள் எதிர்க்கட்சிகளால் தேடி கண்டுபிடிக்கப்பட்டவையல்ல. இலஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நாமாக முன்வைத்து சமர்ப்பித்தமையால் தான் அவை தொடர்பில் அனைத்து தெரிந்து கொண்டுள்ளனர். இவ்வாறு எம்மால் முன்வைக்கப்பட்டு சொத்து விவரங்களில் ஒவ்வொரு சொத்துக்கும் பொறுப்பு கூற முடியும். எனவே தான் எவ்வித தயக்கமும் இன்றி அதனை சமர்ப்பித்திருக்கின்றோம்.

எமது சொத்துக்கள் தொடர்பில் எவருக்கேனும் சந்தேகம் இருந்தால் அது குறித்து முறைப்பாடளித்தால், அதற்கு பதிலளிப்பதற்கு எந்த சந்தர்ப்பத்திலும் நாம் தயாராகவே இருக்கின்றோம். எவ்வாறிருப்பினும் சட்ட விரோதமாக சொத்துக்களை சேகரித்துள்ளவர்களுக்கு இது சவாலாகியுள்ளது. எதிர்க்கட்சியிலிருந்து எமது சொத்துக்கள் தொடர்பில் கூச்சலிட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு இப்போது தான் உண்மையான சவால் ஏற்பட்டுள்ளது?

தொடர்ச்சி 8 ம் பக்கம்.....

காலைக்கதிர்
Kalaikkathir

# எதிர்க் கட்சிகள் இனியும் பிளவுண்டிராமல் மாற்றத்தை நோக்கி பயணிக்கவேண்டும்

## ரவி கருணாநாயக்க எம்.பி. கருத்து

தலைமைத்துவம், சின்னம் என வெவ்வேறு விடயங்களைக் கூறிக் கொண்டு இனியும் பிளவுகளை நோக்கிப் பயணிக்கக்கூடாது. அடுத்த அரசுத் தலைவர் தேர்தலில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு எதிர்க்கட்சிகள் இப்போதிருந்தே தயாராகவேண்டும். அதுவே எதிர்க்கட்சி ஆதரவாளர்களின் விருப்பமாகவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில்சனிக்கிழமைசெய்தியாளர்களைச்சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களாட்சியைப் பாதுகாப்பதற்காக அனைவரும் ஒன்றிணையவேண்டும்என்பதேமக்களின்விருப்பமாகவுள்ளது. இது வசனங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை. எனவே இதனை நடைமுறையில் சாத்தியமாக்குவதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். அனைத்து கட்சிகளும் ஒன்றிணைவது மாத்திரமின்றி அதிலிருந்து எவ்வாறு முன்னோக்கிப் பயணிப்பது என்பதில் அவதானம் செலுத்த வேண்டும்.

தலைமைத்துவம்,சின்னம்எனவெவ்வேறுவிடயங்களைக் கூறிக் கொண்டு இனியும் பிளவுகளை நோக்கி பயணிக்க கூடாது. அடுத்த அரசுத் தலைவர் தேர்தலில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு எதிர்க்கட்சிகள் இப்போதிருந்தே தயாராக வேண்டும். ஐக்கிய தேசிய கட்சி , ஐக்கிய மக்கள் சக்தி என்பது இருவேறு கட்சிகள் அல்ல. இவையிரண்டும் ஒரே கட்சிகளாகும். அதனை நிறைவேற்றுவதற்காக நானும் அர்ப்பணிப்புடன் இருக்கின்றேன்.

கட்சி தலைவர்கள் இதனை ஏற்றுக் கொள்வதைப் போன்றே ஏனையோரும் அதற்கு இணங்க வேண்டும். இன்று அரசியல் பெரும் சிக்கலுக்குள்ளாகியுள்ளது. பெரிய கட்சிகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளன. பரந்துபட்ட கூட்டணியின் ஊடாக அனைவரும் இணைந்து பயணித்தால் இந்த பிரச்சினைக்கு இலகுவாக தீர்வு காண முடியும். தற்போது ஜே.வி.பி.யினரின் சொத்து விவரங்களைப் பார்க்கும் போது 77 ஆண்டு திறந்த பொருளாதாரத்தின் பலனை நேரடியாகக் காண முடிகிறது.

கோடிக்கணக்கானசொத்துக்களுக்குஅதிபதியாகவுள்ளவர்கள் தம்மிடம் ஒரு சதம் கூட இல்லை என எதற்காக பொய் கூற வேண்டும்? உண்மையில் ஆளுங்கட்சியின் சொத்து விவரங்களால் எதிர்க்கட்சிகள் கோபமடையவில்லை. மாறாக மகிழ்ச்சியடைகின்றோம். ஆனால் இந்த நிலைமை அரசியல்வாதிகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்படாமல் மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படுவதை நோக்கி நகர்த்தப்பட வேண்டும் என்றார்.

# முன்னாள் மாகாண சபை உறுப்பினர் 3 சொகுசு வாகனங்களுடன் கைது

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி பதிவு செய்யப்பட்ட 60 மில்லியன் ரூபாய் பெறுமதியான 3 சொகுசு வாகனங்களுடன், முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் அமல் சில்வா, வலானை ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வலானை மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சோதனையின் போது, சந்தேக நபர் இன்று (28) கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த வாகனங்கள் சட்டவிரோதமாக நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டு, போலி ஆவணங்களைப் பயன்படுத்திமோட்டார்போக்குவரத்துத்திணைக்களத்தில் போலிஎண்களில்பதிவுசெய்யப்பட்டதாகக்கூறப்படுகிறது.

இதன்போது லேண்ட் ரோவர் மற்றும் மிட்சுபிஷி ஜீப் வகைகளை சேர்ந்த 03 வாகனங்களும் மீட்கப்பட்டன.

பொலிஸார் நடத்திய ஆரம்ப விசாரணையில், இந்த வாகனங்கள் போலி ஆவணங்களுடன் அரசு நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களின் பதிவு எண்களில் பதிவு செய்யப்பட்டதாக தெரியவந்துள்ளது.

பாணந்துறை நீதவான் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளவழக்குதொடர்பாககைதுசெய்யப்பட்டசந்தேகநபர், நாளை (29) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# நேற்று மட்டும் 664 பேர் கைது

நாடு முழுவதும் பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் குற்றத் தடுப்பு மற்றும் போதைப்பொருள் தடுப்பு விசேட நடவடிக்கையின் கீழ், நேற்று (28) 664 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், பல்வேறு குற்றச் செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடைய 7 பேர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நடவடிக்கையின் போது 28,778 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 254 பேரும், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 163 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், இந்த நடவடிக்கையின் கீழ், மது அருந்தி வாகனம் செலுத்துதல் மற்றும் கவனக்குறைவாக வாகனம் ஓட்டுதல் தொடர்பாக 56 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# கேபிள் கார் விபத்தில் காயமடைந்த மற்றொரு பிக்குவும் நேற்று இறப்பு

குருணாகல், மெல்சிரிபுர நா உயன ஆரண்ய சேனாசனத்தில் அண்மையில் இடம்பெற்ற கேபிள் கார் விபத்தில் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த பிக்கு ஒருவர் நேற்று (28) உயிரிழந்தார்.

இதன்படி குறித்த விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துள்ளது.

நா உயன ஆரண்ய சேனாசனத்தின் மடங்களுக்கு இடையே போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்ட கேபிள் கார் உடைந்து வீழ்ந்த விபத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த ஏழு பிக்குகள் முன்னதாக உயிரிழந்தனர்.

ரஷ்யா, ருமேனியா மற்றும் இந்தியாவைச் சேர்ந்த மூன்று வெளிநாட்டு பிக்குகளும் அவர்களில் அடங்குகின்றனர்.

மேலும், 5 பிக்குகள் காயங்களுடன் குருணாகல் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவைத்தியசாலைதகவல்கள்தெரிவிக்கின்றன.

உயிரிழந்த உள்நாட்டு பிக்குகளின் இறுதி கிரியைகள் நேற்று இடம்பெற்றது.

# கோப் குழுவோடு தொடர்புடைய நிறுவனங்களுக்கு அழைப்பு

அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவான கோப் (சீஓபீ) அதனுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது. எதிர்வரும் ஒக்டோபர் 2 ஆம் திகதி கோப் குழுவில் முன்னிலையாகுமாறு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் வைத்தியர் நிஷாந்த சமரவீர தெரிவித்தார்.

கோப் குழுவினால் முன்னெடுக்கப்படும் பணிகள் மற்றும் அதன் செயல்பாடுகளை மேற்கொள்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல் குறித்து கலந்துரையாடுவதற்காக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தற்போது கோப் குழு 457 அரச நிறுவனங்களைக் கொண்டுள்ளது. இந்நிலையில் அந்த நிறுவனங்களின் செயலாளர்களுக்கு இது தொடர்பாக எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் கணக்காய்வுகள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள் குறித்த அடிப்படை தகவல்களைப் பெற இதன்போது திட்டமிடப்பட்டுள்ளது. இந்த கலந்துரையாடல் ஒக்டோபர் 2 ஆம் திகதி நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச நீதி கேட்டு செம்மணியில் நான்காவது நாளாகவும் போராட்டம்

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நீதி கோரி சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் இன்று நான்காவது நாளாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.




குறித்த போராட்டம் யாழ்.செம்மணியில் கடந்த 29ம் திகதி ஆரம்பமாகிய நிலையில் எதிர்வரும் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இன்றைய போராட்டத்தில் யாழ் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினரும் அதிகளவில் கலந்து கொண்டிருந்தனர்

இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட விவகாரங்களுக்கு நீதி வேண்டியும், உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரித்தும், சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும், செம்மணி விவகாரத்திற்கு நீதி கோரியும் குறித்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில், வடக்கின் ஐந்து மாவட்டங்களை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டுள்ள நிலையில், போராட்டத்தின் ஆரம்பத்தில் அணையா விளக்கு பகுதியில் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தி போராட்டத்தை ஆரம்பமானது.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் காற்றாலை மின் திட்டத்திற்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதோடு நேற்றைய போலீசார் ராணுவத்தின் அடாவடித்தனத்திற்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சிவஞானம் ஶ்ரீதரன் ஆகியோர் இன்று கலந்து கொண்டு போராட்டத்திற்கு ஆதரவு வழங்கினர்

# சிறீதரன் இரங்கல்

தமிழகத்தின் கரூர் மாவட்டம் - வேலுச்சாமிபுரத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியற் பேரணியில் உயிரிழந்தவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தனது இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளார்.

குறித்த செய்திகள், 'சனத்திரட்சியில் சிக்குண்டு குழந்தைகள், பெண்கள் உட்பட 39 பேர் உயிரிழந்துள்ள சம்பவம் மிகுந்த மனவேதனைக்குரியது.

எதிர்பாராதவிதமாகநிகழ்ந்தஇந்தஅசம்பாவிதத்தால்தாய்த்தமிழகத்தைச் சேர்ந்த எமது தொப்புள்கொடி உறவுகளான அப்பாவிப் பொதுமக்கள் 39 பேர் அநியாயமாக உயிரிழந்தமை எமக்கும், எமது மக்களுக்கும் மிகுந்த மனத்துயரை ஏற்படுத்தியிருக்கிறது.

நெருக்கடியும், கனதியும் மிக்க இந்த துயர்மிகுந்த சூழலால் பாதிப்புற்றிருக்கும் எல்லாத்தரப்பினருடனும் உணர்வுரீதியாக நாமும் கரம்கோர்த்துக்கொள்கிறோம். மிகக்குறிப்பாக, புகுமுக அரசியல் கட்சியாக தனது புரட்சிகர அரசியல் பிரவேசத்தை ஆரம்பித்திருக்கும் தமிழக வெற்றிக் கழகத்தினதும், நண்பர் விஜய் அவர்களினதும் அரசியல் பயணம், துயரமும் - கனதியும் மிக்க இந்த உயிர்த்தியாகங்களின் மீது, உறுதி மிக்கதும் மக்கள் மயப்பட்டதுமாக வலுவாக கட்டமைக்கப்படட்டும்.

இழப்பின் வலிகளையும் - ரணங்களையும் உணர்ந்தவர்களாக, ஈழத்தமிழர்களின் உரிமை மீட்புக்காக தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தும் - தீக்குளித்தும் உயிர்க்கொடையளித்த தமிழக உறவுகளின் அளப்பெரும் தியாகங்களை நெஞ்சேந்தியவர்களாக, இந்தப் பெருவிபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஈழத்தமிழர்கள் சார்பில் அஞ்சலிகளும், அவர்களது குடும்பத்தினரின் மன ஆறுதலுக்காக எமது பிரார்த்தனைகளும்.' என தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சுற்றுலாத்துறை மீதான நம்பிக்கையும் சவால்களும்

இலங்கையின் வீழ்ந்த பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான முதன்மை வழியாக சுற்றுலாத்துறையை அரசு தேர்ந்தெடுத்துள்ளது.'சுற்றுலா' என்ற கூடைப்பையில் முட்டைகள் அனைத்தையும் வைப்பது போல, நாட்டின் பெரும்பகுதி நம்பிக்கை இந்தத்துறையில் குவிக்கப்பட்டுள்ளது. இது ஓர் அளவுக்கு நியாயமான திட்டமே, எனினும் அதனுடன் சேர்ந்திருக்கும் ஆபத்துகளையும் புறக்கணிக்க முடியாது. உலகளாவிய மாறுபாடுகள், இயற்கைப் பேரிடர்கள், அரசியல் நிலையின்மை, பாதுகாப்புச் சவால்கள் ஆகியவை சுற்றுலாத் துறையைக் குறுக்கிடக்கூடியவை. குறிப்பாக இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் புவிசார் அரசியல் பிரச்சினைகள் இலங்கையையும் பாதிக்கக்கூடியவையே.

இந்நிலையில், உள்ளகமாக பல மாற்றங்கள் தேவைப்படுகிறது. சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கே அல்லாமல், அவர்கள் நாட்டில் நீண்டநாள் தங்கி அதிகம் செலவிடும் விதமாகச் சூழ்நிலைகள் அமைக்கப்படவேண்டும். சேவைகளை எளிதாக அணுகும் வசதிகள், அதிகாரப்பூர்வத் துறைகளின் மனப்போக்கில் மாற்றம், மின்–மயமாக்கல், கலை–விளையாட்டு–சமூகச் செயல்பாடுகள் ஆகியவை பெரிதும் வளர்க்கப்பட வேண்டியவை. குறிப்பாக அதிகம் செலவிடும் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பது குறித்த விவாதம் சமூகத்தில் வலுவாக எழுந்துள்ளது.

சமீபத்திய புள்ளிவிபரங்களின்படி, 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை 12 இலட்சத்துக்கும் அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் இலங்கையை வந்தடைந்துள்ளனர். இந்தியா, ரஷ்யா, ஐக்கிய இராச்சியம் ஆகியவை முன்னணியில் உள்ளன. இது நல்ல முன்னேற்றம்தான். ஆனால் அதேநேரத்தில், உள்ளூர் மக்களும் சுற்றுலாப்பயணிகளும் முறையிடும் ஒரு தீவிர பிரச்சினை தீவில் அதிகரித்துள்ளது. சுற்றுலா விசாவில் வந்தவர்கள் பலர் சட்டவிரோதமாக வணிகங்களையும் விடுதி சேவைகளையும் தொடங்கி நடத்துகின்றனர். குறிப்பாக ரஷ்யா, சீனா, உக்ரைன், இஸ்ரேல் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இவ்வாறு சட்டவிரோதமாக செயல்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலைமையால் உள்ளூர் சுற்றுலா தொழில்கள் பெரும் பாதிப்பைச் சந்திக்கின்றன. 'வெளிநாட்டவர்கள் சட்டவிரோதமாக வணிகம் நடத்தும்போது, நியாயமான போட்டி சீர்குலைகிறது. நாங்கள் வாழ முடியாத நிலையில் தள்ளப்படுகிறோம்' என ஒரு உள்ளூர் விடுதி உரிமையாளர் கூறியுள்ளார். சட்டப்படி பதிவு செய்யப்பட்ட தொழில்கள் அரசின் வரிவசூலிக்கும், ஆய்வுக்கும் உட்படும்போது, வெளிநாட்டு 'கள்ள வணிகங்கள்' கண்காணிப்பின்றி இயங்குவது ஒரு பெரிய அபாயம். அரசு சமீபத்தில் விசா காலவரம்பை மீறுவோருக்கு அபராதத்தை உயர்த்தியிருந்தாலும், நடைமுறைப்படுத்துதலில் குறைபாடுகள் பல உள்ளன.

மேலும், சைபர் குற்றச்செயல்கள் தற்போது இலங்கையில் அதிகரித்து வருவது ஒரு கடுமையான எச்சரிக்கை மணி. கடந்த ஆண்டில் மட்டுமே நூற்றுக்கணக்கான சீனப் பிரஜைகள் இணைய மோசடிகளில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டனர். ஹோட்டல் அறைகளையே மையமாக்கி செயல்பட்ட இவர்கள், தொலைபேசிகள், கணினிகள், இணைய சாதனங்கள் முதலியவற்றைப் பயன்படுத்தி பல மாதங்களாகத் திட்டமிட்ட குற்றச்செயல்களை நடத்தியது தெரியவந்தது. இதுபோன்ற சம்பவங்கள், ஹோட்டல் உரிமையாளர்களின் நற்பெயரையே கேள்விக்குள்ளாக்குகின்றன.

இப்படிப்பட்ட சவால்கள் மத்தியில், இலங்கையின் சுற்றுலா 'நம்பிக்கை தூண்' முறையாக வளர்ந்து, மக்களுக்கு உண்மையான நன்மை தரவேண்டுமானால், சட்டங்களில் உள்ள புலன்களை அரசு உடனடியாக சரிசெய்ய வேண்டும். அனுமதி இன்றி வணிகங்களில் ஈடுபடும் வெளிநாட்டவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சைபர் குற்றவியல் தொடர்பான சட்டங்கள் வலுப்படுத்தப்படவேண்டும். வெளிநாட்டு முதலீடுகள் வரவேற்கப்படலாம், ஆனால் அவை உள்ளூர் தொழில்களை நசுக்காமல், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்விதமாக கட்டுப்பாடுகளுடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இலங்கைச் சுற்றுலா துறையின் வளர்ச்சி நாட்டின் பொருளாதாரத்திற்கு ஒரு பெரும் வாய்ப்பு. ஆனால் அதனை பாதுகாப்பாகவும், நீடித்தும் வைத்திருக்க தேவையான சட்டம், ஒழுங்கு, திட்டமிடல், உள்ளூர் பங்கேற்பு ஆகியவை உறுதியாக நிலைநிறுத்தப்படாவிட்டால், 'சுற்றுலா' என்ற கூடைப்பையில் வைக்கப்பட்டிருக்கும் முட்டைகள் அனைத்தும் ஒருநாள் உடைந்து விழும் அபாயம் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும்.

# ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை ரணிலே கொண்டுவந்தார்

### ஞாபகப்படுத்துகிறார் ஐ.தே.க. தவிசாளர்

இன்று ஆளும்தரப்பு தனது கைகளில் எடுத்துச் செயற்படும் இலஞ்ச, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை ஆசியாவிலேயே பலமானதாக ரணில் விக்கிரமசிங்கவே கொண்டு வந்தார் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலியில் அமைந்துள்ள ஐக்கிய தேசிய கட்சி காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல்வாதிகள் மற்றும் பிரபலங்களின் சொத்துகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் தேடிப்பார்க்கப்போவதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அதில் எனது பெயரும் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனது சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் சுமார் 30 வருடங்களுக்கும் அதிக காலம் சமர்ப்பித்திருக்கிறேன். இந்த சொத்து, மற்றும் பொறுப்புக்களை தேடிப்பார்க்கும் இந்த நடவடிக்கைக்கும் அப்பால் சென்று, தேடிப்பார்க்கும் பொறிமுறை ஒன்றை ரணில் விக்ரமசிங்க அரசுத் தலைவர் பதவியில் இருக்கும், ஆளும்தரப்பினால் அனுமதிக்கப்பட்ட ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

எமது நாடு ஊழல் நிறைந்த நாடு என, எமது சில அரசியல்கட்சிகள் உலகுக்கு காட்டிய போது ரணில் விக்ரமசிங்க, 2023ஆம் ஆண்டு 9ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை 2023 ஒகஸ்ட் 8 நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்து அனுமதித்துக்கொண்டது. விசேடமாக நாட்டு மக்கள் ஒன்றை நினைவில் கொள்ளவேண்டும். இந்த ஊழலை நாட்டுக்குள் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான சட்ட திட்டங்களை அமைத்தது, இந்த நாட்டை இரண்டரை வருடங்கள் ஆட்சி செய்த ரணில் விக்கிரமசிவாகும்.

எமது நாட்டுக்குள் ஊழல் இருக்கிறது என்பதால், அதனை கட்டுப்படுத்துவதற்கு தேவையான, ஆசியாவிலே இருக்கும் பலம்வாய்ந்த சட்டம், ஒழுங்கு கட்டமைப்பொன்றை அறிமுகப்படுத்தவே அவர் இதனை கொண்டு வந்தார். இதன் மூலம் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் இருக்கின்றன. அதேபோன்று நல்ல விடயங்களும் இருக்கின்றன. இதன் ஊடாக சில சந்தர்ப்பங்களில் அரச இயந்திரம் முகம்கொடுக்கின்ற பிரச்சினைகளும் இருக்கின்றன. இந்த ஊழல் எதிர்ப்பு மாத்திரமல்ல, சுமார் 90 சட்டங்கள் வரை ரணில் விக்ரமசிங்க தனது இரண்டரை வருட காலத்துக்குள் அனுமதித்துக்கொண்டுள்ளார்.

இந்த சட்டங்கள் அனைத்தும் நாட்டு மக்களின் உரிமைகளை பாதுகாக்க செயற்படுத்தியது கடந்த இரண்டரை வருட காலத்திலாகும் என்பதை நாட்டு மக்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அதேபோன்று உலகில் மனிதர்கள் செய்யும் பிரதான விடயம்தான் தவறு. எல்லோரும் பிறந்ததில் இருந்து தவறு செய்கிறார்கள். அதுதான் உலகின் தன்மை. அதனை நிறுத்த முடியாது. கட்டுப்படுத்த மாத்திரமே முடியும்.

ரணில் விக்ரமசிங்கவுக்கு இந்த நாட்டை ஐக்கியப்படுத்துவதே தேவையாக இருந்தது. அந்த ஐக்கியப்படுத்தும் நடவடிக்கைகளுக்காகவே ஐக்கியக் தேசிய கட்சியின் 79ஆவது ஆண்டு நிறைவுவிழாவின்போது, அனைவரையும் ஒன்றிணைத்துக்கொண்டு கொண்டாடினோம். அந்த தொடர்புகளை நாங்கள் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்ல வேண்டும் என்றார்.

# பெக்கோ சமனின் அறிவுறுத்தலின் பேரிலேயே மனம்பேரி கொள்கலன்களைப் பொறுப்பெடுப்பு

### பொலிஸ் விசாரணையில் தகவல்

பெக்கோ சமனின் அறிவுறுத்தலின் பேரில் ஐஸ் இரசாயனம் அடங்கிய இரு கொள்கலன்களையும் சம்பத் மனம்பேரி மித்தெனிய பகுதிக்கு கொண்டுசென்றமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் மேல் மாகாண வடக்கு குற்றப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள சம்பத் மனம்பேரியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, மித்தெனிய பகுதியில் கண்டெடுக்கப்பட்ட ஐஸ் போதைப்பொருள் அடங்கிய இரண்டு கொள்கலன்கள் தொடர்பாக விசாரணை இடம்பெற்று வருகின்றன.

சந்தேகநபர், பெக்கோ சமனின் அறிவுறுத்தலின் பேரில் ஐஸ் இரசாயனம் அடங்கிய இரு கொள்கலன்களையும் மித்தெனிய பகுதிக்கு கொண்டு சென்றதாகவும், எனினும் அவை ஐஸ் போதைப்பொருள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் இரசாயனம் என்பது தனக்கு ஒரு சில நாட்களுக்குப் பின்னரே தெரியவந்ததாகவும் தெரிவித்துள்ளார். குறித்த இரு கொள்கலன்களையும் பொறுப்பேற்குமாறு பெக்கோ சமன் இந்தோனேசிய பொலிஸாரால் கைது செய்யப்படுவதற்கு முன்னரே வாட்சப் செயலியினுடாக அறிவுறுத்தியிருந்தார்.

எனினும் அதில் உள்ள இரசாயனம் தொடர்பில் எனக்குத் தெரியப்படுத்தவில்லை. 'அண்ணா எனது இரு கொள்கலன்கள் உள்ளன. அவற்றை விடுவித்துக்கொள்ள உதவ முடியுமா?' என பெக்கோ சமான் கோரியிருந்தார், அதற்கு தம்பி இது நோயில் விழுவது போல' எனதான் பதிலளித்திருந்த போதிலும், பெக்கோ சமன் 'அப்படி ஒன்றும் இல்லை. ஒரு வகைக் கற்களே கொண்டுவரப்பட்டுள்ளன. சுரங்கத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளன. நீங்கள் அவற்றை பெற்றுக்கொள்ளவது மாத்திரமே தேவையாக உள்ளது' என குறிப்பிட்டார் என சம்பத் மனம்பேரி தெரிவித்துள்ளார்.

மேலும் பெக்கோ சமன் தெரிவித்ததன் படி தனது சகோதரன் பியால் மனம்பேரியுடன் சென்று விடுவிக்கப்பட்ட கொள்கலன்களைப் பெற்றுக்கொண்டு மித்தெனிய பகுதிக்கு அவற்றை கொண்டு வந்தோம். அவற்றுக்குரிய ஆவணங்களையும் பெக்கோ சமன் வாட்சப் செயலியினூடாக அனுப்பி வைத்தார். கொள்கலன்களை மித்தெனிய பகுதிக்குச் கொண்டு சென்று இரு நாட்கள் கடந்த பிறகே அவற்றில் இருந்தவை ஐஸ் இரசாயனம் என தனக்கு தெரியவந்ததாகவும் சம்பத் மனம்பேரி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

மேலும் அவ்விடத்தை அறிந்துக் கொண்டதன் பின்னர் 'தம்பி இது ஒரு பாரிய நோய். ஆகையால் செய்வதை விரைவாக செய்யுங்கள்' என தான் பெக்கோ சமனிடம் தெரிவித்திருந்தாகவும், அதற்கமைய பெக்கோ சமனுடன் இருந்த பாணந்துறை நிலங்கவின் ஆதரவாளர் குழுவினர் குறித்த இரசாயனத்தை தொகுதியாக பிரித்து நுவரெலியா, அம்பாந்தோட்டை மற்றும் கந்தானை ஆகிய பகுதிகளுக்கு கொண்டு செல்ல ஆரம்பித்தனர். இந்நிலையில் கெஹெல் பத்தரபத்மே உள்ளிட்ட குழுவினர் இந்தோனேசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்ட விடயத்தை அறிந்துக் கொண்டதன் பின்னர் தனது சகோதரருடன் இணைந்து அவசரமாக இரசாயனத்தை புதைத்ததாகவும், அதன்பின்னர் மித்தெனிய பகுதியிலிருந்து தப்பிச் சென்றதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் பெக்கோ சமன் மற்றும் தருண் ஆகியோர் மூலம் அறிமுகமான மன்னார் பகுதியில் கேரள கஞ்சா விற்பனையில் ஈடுபடும் டைகர் என்பவரின் உதவியுடன் படகின் மூலம் இந்தியாவுக்கு தப்பிச் செல்ல திட்டமிட்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது. சந்தேநபரான சம்பத் மனம்பேரி போதைப்பொருள் வளையமைப்புடன் எவ்வாறான தொடர்பைபேணிவந்தார்? என்பதை அறிந்துக்கொள்ள அவரின் கையடக்கத் தொலைபேசியை கண்டறியும் முயற்சித்துள்ள போது, தான் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் எவ்வாறாயினும் விசாரணை அதிகாரிகள் எனது கையடக்க தொலைபேசியை மீட்க முயற்சிப்பார்கள் என்பதை அறிந்து வெள்ளவத்தையில் ரயில் தண்டவாளத்தின் மீது கைப்பேசியை வைத்து அதை அழித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை பெக்கோ சமனுக்கு சொந்தமான துப்பாக்கிகள், போதைப்பொருள் மற்றும் கேரள கஞ்சாவை போன்றவற்றை கடத்தல், விற்பனை செய்தல் உள்ளிட்ட பல குற்றங்களில் தான் ஈடுபட்டதாகவும் சம்பத் மனம்பேரி ஒப்புக்கொண்டுள்ளதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர். மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவின் பணிப்பாளர் ரோஹன ஒலுகலகே மற்றும் அவ்வளையத்துக்குப் பொறுப்பான பிரதான பொலிஸ் பரிசோதகர் லிண்டன் த சில்வா ஆகியோரின் தலைமையில் சந்தேகநபர் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# யாழ்ப்பாணத்திலும் விக்சித் பாரத் ஓட்டம்

இந்தியாவின் விக்சித் பாரத் ஓட்டம் நேற்று யாழ்ப்பாணத்திலும் முன்னெடுக்கப்பட்டது

இந்தியாவின் சுதந்திரமடைந்ததின் நூற்றாண்டை நினைவுபடுத்தி யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்த ஓடடம் இடம்பெற்றது. யாழ்ப்பாணத் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் தொடங்கி, யாழ் பண்ணை பகுதி ஒரை இந்த ஓட்டம் முன்னெடுக்கப்பட்டது. பண்ணை சுற்று வட்டம் ஊடக மீண்டும் யாழ்ப்பாணத் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தை வந்தடைந்தனர் ஓட்டக்காரர்கள்.

உலகளாவிய அளவில் 150-க்கும் மேற்பட்ட இடங்களில் ஒரே நேரத்தில் நடைபெற்ற விக்சித் பாரத் ஓட்டம் 2025, இந்தியாவின் முன்னேற்றப் பயணத்தை கொண்டாடுவதோடு, சேவை, மனவொற்றுமை மற்றும் நிலைத்தன்மையை ஊக்குவித்து, உலகம் முழுவதும் சமூகங்களை இணைக்கும். இந்தியாவின் முன்னேற்றத்தையும் பண்பாட்டு மதிப்புகளையும் வெளிப்படுத்தும் இந்நிகழ்ச்சி, சமூகக் குழுக்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து இந்தியாவின் நண்பர்களையும்











இளைஞர்களையும் இணைத்து, 'உலகமே ஒரே குடும்பம்' என்ற வசுதைவ குடும்பகம் என்ற உணர்வை வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது

இதன் மூலம் இந்தியாவின் முன்னேற்றக் கதையை உலகுடன் இணைப்பதன் முக்கியத்துவத்தையும்,மக்களுடனானஉறவுகளை வலுப்படுத்துவதையும் வலியுறுத்தும்.வகையில் இது அமைந்தத என்று இந்தியத் தூதரகம் தெரிவித்தது.

இந்நிகழ்வில் யாழ் இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி கடத்தொழில் நீதியல் வளத்துறை அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகரன் வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் யாழ் இந்திய துணை தூதரக அதிகாரிகள் பல்கலைக் கழக மாணவர்கள் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட. ஆர்வலர்கள் பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்

## கலைமகள் துதி




பொற்பதம் பணிந்தோமம்மா நற்றுணை என்றும்நீயே !
மாதரது குரலிலும் மழலையரின் மொழியிலும்
கீதமென ஒலித்திடும் குயிலனது குரலிலும்
பேதமற அமர்ந்துமே பெருங்கருணை பொழிகிறாய்
வீணையினை மீட்டிடும் வெண்டாமரை வாணியே

நூல்பல கற்கவேண்டும் நுண்பொருள் உணரவேண்டும்
வாய்மையாய் வாழவேண்டும் மனவழுக் ககலவேண்டும்
தாழ்மையாய் இருக்குமெண்ணம் தான்மன
மமரவேண்டும்
வாணியே வேண்டுகின்றோம் வழங்கியே நிற்பாயம்மா

கற்றவர் அணைக்கவேண்டும் மற்றவர் மதிக்க வேண்டும்
நற்றமிழ் நாவிலென்றும் நடமிட்டு நிற்கவேண்டும்
சொற்றமிழ் சிறக்கவேண்டும் சுவையுடன் பாடவேண்டும்
பொற்பதம் பணிந்தோமம்மா நற்றுணை என்றும்நீயே

ஞானியர் போற்றுமம்மா நான்மறை உணர்த்துமம்மா
தேனினும் இனிமைமிக்காய் தெளிவினை ஊட்டுகின்றாய்
வானவர் வியக்குமாறு மதியினைத் தந்துநின்று
வையத்தார் விரும்புவண்ணம் வைத்திட்டாய்
வாணித்தாயே

ஏழைகள் கற்கவேண்டும் இருப்பவர் ஈய்தல்வேண்டும்
வாழ்விலே கல்விச்செல்வம் வானோங்கி நிற்கவேண்டும்
தோழமை உணர்வுகொண்டு கற்றவர் இணையவேண்டும்
நாளெலாம் பரவுகின்றோம் நல்லருள் புரிவாயம்மா



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண்- ஆஸ்திரேலியா

# ஐ.தே.கவுடன் ஏனைய கட்சிகளும் இணைந்தால் எந்தவொரு சக்தியாலும் ஈடுகொடுக்கமுடியாது

## முன்னாள் அமைச்சர் நவீன் வின் ஆசை இது

ஐக்கிய தேசியக் கட்சியுடன் அனைத்துக் கட்சிகளும் இணைந்தால் வேறு எந்தவொரு அரசியல் சக்தியாலும் அதற்கு ஈடு கொடுக்க முடியாது. ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐ.தே.க.வுக்கு இடையிலான பிளவினால் சுமார் 15 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்காமலிருக்கின்றனர். அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட்டால் இலகுவாக எமது வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என முன்னாள் அமைச்சர் நவீன் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தியுடன் தொடர்ந்தும் பேச்சு நடக்கிறது. ஏனைய கட்சிகளும் எம்முடன் இணைந்து செயற்பட இணக்கம் தெரிவித்துள்ளன. ஐக்கிய தேசிய கட்சியின் முகாமுக்குள் அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைக்க முடியுமானால் அங்கிருந்து வெற்றிக்கான பயணத்தை ஆரம்பிக்க முடியும். ஐக்கிய தேசிய கட்சிக்கு மாத்திரம் சுமார் 40 இலட்சம் வாக்குகள் உள்ளன.

எனவே இந்த 40 இலட்சம் வாக்காளர்களையும் ஓரிடத்தில் ஒன்று சேர்க்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அதற்கான முயற்சிகளில் நானும் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றேன். எனவே சகல ஐ.தே.க. ஆதரவாளர்களும் அதில் பங்கேற்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம். தலைமைத்துவம் என்பது இங்கு பிரச்சினையல்ல. எனவே இரு கட்சிகளினதும் தலைவர்கள் அந்தப் பதவிகளை வகிக்க முடியும்.

உதாரணமாக மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டால் இவ்விரு கட்சிகளின் சார்பாகவும் பொது முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்க நான் தயாராக இருக்கின்றேன். எனவே இணைந்து செயற்படுவற்கான பல வழிகள் உள்ளன. இதனை நேர்மறையாக மாத்திரமே சிந்திக்க வேண்டும். மாறாக ஒரு சிறு விடயத்தைக் கூட எதிர்மறையான கோணத்தில் பார்க்கக் கூடாது. ஒருமித்த அழைப்பு விடுக்கப்படும் போது ஐ.தே.க. ஆதரவாளர்கள் அதனை ஏற்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

மாகாணசபைத் தேர்தலில் சகல மாகாணங்களுக்கும் இரு கட்சிகளின் சார்பிலும் ஒரே வேட்பாளர் பட்டியலை தயாரிக்க முடியுமெனில் அது நிச்சயம் எமது வெற்றிக்கு வழி வகுக்கும். ஐக்கிய மக்கள் சக்தி என்பது ஐக்கிய தேசிய கட்சியிலிருந்து சென்ற குழுவினரையே கொண்டுள்ளது. அவ்வாறிருக்கையில் ஏன் எம்மால் இணைந்து பயணிக்க முடியாது? எமது சம்மேளனத்தில் பங்கேற்ற அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்து பயணிப்பதே எமது இலக்காகும்.

இவ்வாறு ஐ.தே.க.வுடன் அனைத்து கட்சிகளும் இணைந்தால் வேறு எந்தவொரு அரசியல் சக்தியாலும் அதற்கு ஈடு கொடுக்க முடியாது. இரு கட்சிகளுக்கிடையிலான பிளவினால் சுமார் 15 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்காமலிருக்கின்றனர். அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்பட்டால் இலகுவாக எமது வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்றார்.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A - 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B - 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C - 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

# ஜனநாயக நாட்டில் மக்கள் தமக்கான உரிமை கேட்டுப் போராடுவது தவறா?

## மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் கேள்வி

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் பொலிஸார் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டுள்ளனர்.ஒருஜனநாயகநாட்டில்உரிமை கேட்டு போராடுவது தவறா? போராட்டத்தின் ஊடாக ஆட்சிக்கு வந்தவர்கள் என்றால் அது ஜே.வி.பி என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மன்னாரில் நேற்று மதியம் இடம்பெற்ற செய்தியாளர்கள்சந்திப்பில்கருத்துதெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னாரில் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக பல்வேறு விதமான போராட்டங்களும், கோரிக்கைகளும் முன் வைக்கப்பட்டு வருகின்ற சூழ்நிலையில், கடந்த மாதம் 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அமைச்சர்களுடன் சந்திப்பும்,13 ஆம் திகதி அரசுத்தலைவர்யுடனான சந்திப்பிற்கு பின்னர் ஒரு மாத காலம் இடை நிறுத்தப்பட்டிருந்த பணிகள் அதற்கு பின்னர் மாவட்டத்தில்இயங்குகின்றஅமைப்புக்களுடனான கலந்துரையாடல், பாதிக்கப்பட்ட தரப்புக்களுடன் 5 இடங்களில் கலந்துரையாடல் என இடம் பெற்றன.

அதனைத் தொடர்ந்து வருகை தந்த விசேட குழுக்களிடம் அமைப்புக்கள் ஊடாக கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டது.இவற்றை எல்லாம் பெற்றுக்கொண்டவர்கள், நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்குவது போல் அரசுத் தலைவர்யினுடைய செயலாளர் கடந்த 22 ஆம் திகதி மின்சக்தி அமைச்சிற்கு கடிதம் எழுதியுள்ளார் 14 காற்றாலைகளையும் அதற்கான பணிகளை ஆரம்பிக்குமாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினமே மின் சக்தி அமைச்சின் செயலாளர் மன்னார் மாவட்ட செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.ஆகவே நீதிமன்றத்தின் தீர்ப்புபோல்மக்கள்மன்றங்களின்விவகாரங்களை அரசு கையாள நினைப்பது சர்வ அதிகாரத்தின் அதி உச்சமாக நாங்கள் பார்க்கின்றோம். ஏனெனில் பாதிக்கப்பட்ட மக்களுடைய வாதங்களைக் கேட்டு உணர்ந்தவர்கள் அந்த மக்களுடன் மீண்டும் கலந்தரையாடியே தீர்மானத்திற்கு அவர்கள் வந்திருக்க வேண்டும்.

நீங்கள் சொல்வதை சொல்லுங்கள்.நாங்கள் நினைப்பதைத்தான் செய்வோம் என்றால் அரசு முற்று முழுதாக சர்வாதிகாரமாகத்தான் செயல்படுகிறதா? மக்களுடைய அடிப்படை கோட்பாட்டில் இருந்து விலகி கடந்த கால ஆளும்தரப்புக்கள் மக்களுக்கு எதிரான, சமூகத்திற்கு எதிரான நிலைப்பாட்டை கையில் எடுத்ததோ , அதே விடையத்தை அநுரவின் அரசும் முன்னெடுக்கின்றதா? என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்ற மக்களோடு,எந்த விதமான உரையாடலும் மேற்கொள்ளாது ஆளும்தரப்பினர் தாங்கள் நினைத்தது போல் இத்திட்டத்தை எவ்வாறும் நிறைவேற்றலாம் என்று திட்டமிட்டுள்ளனர்.

அதனடிப்படையில் சனிக்கிழமை (27) இரவு காற்றாலைக்கான உதிரிப்பாகங்களை மன்னாருக்கு கொண்டு வந்துள்ளனர். இதன்போது அதற்கு எதிராக ஜனநாயக ரீதியாக போராடிய மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மிலேச்ச தனமானது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் பொலிஸார் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டுள்ளது.ஒரு ஜனநாயக நாட்டில் உரிமை கேட்டு போராடுவது தவறா?போராட்டத்தின் ஊடாக ஆட்சிக்கு வந்தவர்கள் போராட்டத்திற்கு ஒரு கட்சி என்றால் அது ஜே.வி.பி தான்.அந்த நிலையில் இருந்து கொண்டு ஆட்சி சித்தாந்தத்தை ஏற்படுத்திய கட்சி இன்று அதே போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு நசுக்குவது என்பது உண்மையில் அவர்களின் மனநிலை என்ன?

போர் வெற்றி வாத மனோ நிலையில் ராஜபக்சக்கள் எவ்வாறு செயலாற்றினார்களோ அந்த ராஜபக்சக்களைப் போர் வெற்றிவாத மன நிலைக்கு இட்டுச் சென்றதில் ஜே.வி.பி இன்றைய அரசுத் தலைவர் மிக முக்கியமானவர். ஆகவே அதே மனநிலையில்தான் இன்றும் அவர்கள் தமது அரசியல் இருப்பை தக்க வைத்துக்கொள்ள முனைகிறார்கள் என்கின்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுகின்றது.

உங்களுடைய கட்சிக்கு கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இந்த மாவட்டத்தில் அதிக அளவான மக்கள் வாக்களித்துள்ளனர். அந்த மக்களின் உணர்வுகளையும் கோரிக்கைகளையும் சற்றுக்கூடப் புரிந்துகொள்ளாத இந்த அரசு தான்தோன்றித்தனமாக ஜனநாயக விரோத செயல்பாட்டில் ஈடுபடுகின்றது. நாட்டிற்கு அரசுத் தலைவர் வந்ததன் பின்னர் மக்களுடன் உரையாடி அவர்களினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தையும் எவ்வாறு நடை முறைப்படுத்த போகின்றீர்கள்?.நடை முறைப் படுத்துகின்ற போது எழுகின்ற சவால்களுக்கு என்ன தீர்வு வைத்துள்ளீர்கள்?.

ஏற்கனவே 30 காற்றாலைகள் ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கும், பிரதேசங்களுக்கும் என்ன தீர்வு வைத்துள்ளீர்கள்?.இவற்றை எல்லாம் கலந்துரையாடி தான் அரசு அடுத்த கட்ட நகர்வுக்கு போக வேண்டுமே தவிர நாங்கள் நினைத்ததை தான் செய்வோம் என்றால் இது ஜனநாயக அரசும் இல்லை.

நாட்டின் கோட்பாட்டு தத்துவமும் இல்லை.மன்னார் மக்கள் ஏன் காற்றாலைக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என்று அரசு தரப்பு இன்னும் புரிந்து கொள்ளவில்லை.தீவுப் பகுதிக்குள் காற்றாலை வேண்டாம் என்பதையே மக்கள் தெரிவிக்கின்றனர்.மக்கள் காற்றாலை திட்டத்திற்கு எதிரானவர்கள் இல்லை.

மேலும் கடந்த ஆளும்தரப்பு தான் இந்த திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது என தற்போதைய அரசு கூறுகிறது.ஆனால் கடந்த 22-02-2025 அன்று கேலீஸ் நிறுவனத்திற்கு 10 காற்றாலைகள் அமைக்க மின் சக்தி அமைச்சுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டுள்ளது.இந்த நிலையில் அதற்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்று தற்போதைய அரசு கூறிவிட முடியாது. எனவே ஆளும்தரப்புப் புரிந்துகொண்டுசெயல்படவேண்டும்.மக்களின்ஜனநாயகஎழுச்சியை எந்த ஆளும்தரப்பாலும் கட்டுப்படுத்த முடியாது என்பதை கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் இலங்கை சந்தித்தது.

எனவே காற்றாலைகளை நிறுவுவதற்கு முன்னர் ஆளும்தரப்பு எங்களுடன் கலந்துரையாடல்களுக்கு வரவேண்டும். வரத் தவறும் பட்சத்தில் மன்னார் மக்கள் தொடர்ந்தும் இவர்களுக்கு எதிரான நிலைப்பாட்டையே கடைப்பிடிப்பார்கள்.அதற்கான சூழலை அரசு ஏற்படுத்தியுள்ளது. மன்னார் மக்கள் இத்திட்டத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.தொடர்ந்தும் மக்கள் இவர்களுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கடை பிடிப்பார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மீனவ அமைப்பின் பிரதிநிதி ஆலம், சமூகச் செயற்பாட்டாளர் ரெபேக்கா ஆகியோர் கலந்துகொண்டு கருத்துக்களைத் தெரிவித்தனர்.

உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு

•CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
•NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
•வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
•ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
•GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

## எமது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பிலுள்ளவர்கள் தமது உண்மையான சொத்து விவரங்களை முன்வைத்துள்ளமையால், கடந்த காலங்களில் ஆட்சி செய்தவர்களும் தமது உண்மையான சொத்து விவரங்களை சமர்ப்பிக்கவேண்டும்.பொய்யானதகவல்களை சமர்ப்பித்தால் அதனை மக்கள் இலகுவாக அறிந்து கொள்வார்கள். நாம் உண்மையான தகவல்களை வழங்கியிருக்கின்றோம். எனவே எதிர்க்கட்சிகளின் கூச்சல்களை நாம் கவனத்தில் கொள்ளவில்லை.

பிரதேசசபையில் அங்கத்துவம் வகிக்கும் நாள் முதல் நாம் சொத்து விவரங்களை சமர்ப்பித்துக் கொண்டிருக்கின்றோம். எனவே எமக்கு இது புதிதல்ல. எனவே நாம் சொத்து மதிப்பு பிரகடனத்தை சமர்ப்பிக்கவில்லை என்று எம்மீது யாரும் குற்றஞ்சுமத்த முடியாது. ஆனால் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு இப்போது தான் ஞாபகம் வந்திருக்கிறது. அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமையவே தற்போது போதைப்பொருட்கள் கனிசமானளவு கைப்பற்றப்படுகின்றன.

வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ள மேலும் சிலர் விரைவில் கைது செய்யப்படுவர். அவர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்படும் போது, அவர்களுடன் தொடர்புடைய அரசியல் தலைவர்கள் குறித்த மேலும் பல விவரங்கள் வெளிப்படுத்தப்படும் என்றார்.

## தங்காலைக்குச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் மகிந்த ராஜபக்சவின் நலன் தொடர்பாக கேட்டறிந்துகொள்ளவும் இதன்போது ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

## நீதிக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் கிழக்கில் அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் தம்பிலுவில் மத்திய சந்தை முன்பாக நேற்றுத் தொடங்கியது. .

வடக்குகிழக்குவலிந்துகாணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் ஸ்ரீலங்காவின் உள்நாட்டுபொறிமுறையைநிராகரிக்கின்றோம், தமிழினவழிப்பு,வலிந்து காணாமல் ஆக்கப்படுதல், போர் குற்றங்கள் மற்றும் மனித புதைகுழிகள் குறித்து நாம் சர்வதேச சுயாதீன விசாரணையை மட்டுமே கோருகின்றோம் எனும் தொனிப் பொருளுடன் இப் போராட்டம் தொடங்கியது.

இந்தப் போராட்டத்தில் அதிகளவிலான பொதுமக்களும் பாதிக்கப்பட்ட தரப்பினரும் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளும் கலந்துகொண்டிருந்தனர்.

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவிதம்பிராசா செல்வராணி, மட்டக்களப்பு மாவட்ட அமல்ராஜ் அமலநாயகீ செல்லையா திலகவதி மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் உட்பட நூற்றுக்கு உட்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

## நிலக்கரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயருடன் மோசடி குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.. இந்த நிறுவனம் 2014இல் சதொச நிறுவனத்துக்கு 30ஆயிரம் மெட்ரிக்தொன் அரிசி விநியோகத்தின்போது, அரச கொள்முதல் வழிகாட்டலை மீறியுள்ளதாக 2016.9.20 அன்று அரச தொழில் முயற்சியாளர் செயற்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வாளர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த நிறுவனத்தின் உரிமையாளர் 2022இல் புது டில்லியில் மதுவரி மோசடி ஊடாக நாணய சுத்திகரிப்பு தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்தார். நிறுவனத்தின்உரிமையாளருக்குமேலதிகமாக குறித்த நிறுவனத்தின் உள்நாட்டு பிரதிநிதி ஒருவருக்கும் மோசடி குற்றச்சாட்டு இருந்து வருகிறது.கிரிக்கெட் போட்டி ஆய்வாளராக பணியில் இருந்துவந்த அவருக்கு, ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டின் பிரகாரம் 2019இல் இருந்து 7 வருடங்களுக்கு சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலால் போட்டித் தடை விதித்திருப்பதாக செய்தி இருக்கிறது.

அதனால் இந்த ஆளும்தரப்பின் கீழ் நிலக்கரி கேள்விக்கோரலை வழங்கியுள்ள நிறுவனத்துக்கும், அதன் உரிமையாளருக்கு மற்றும் உள்நாட்டு பிரதிநிதிகளுக்கும் மோசடிக் குற்றச்சாட்டு இருக்கிறது. இலங்கையில் ஊழல் மற்றும் மோசடி மேற்கொள்வது அரசியல்வாதிகள், உயர் பதவியில் இருக்கும் அரச அதிகாரிகள், வியாபாரிகள் என்ற மூன்று தரப்பினர் ஒன்றிணைந்த வலையமைப்பிலாகும்.

மேலும் இலங்கை மின்சார சபையை துண்டாக்கி விற்பனை செய்யும் சட்டத்துக்கு எதிராக ஊழியர்கள் போராட்டம் செய்யும்போது மின்சார விநியோகம் அத்தியாவசிய சேவை என தெரிவித்து, அரசுத் தலைவர் வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டார். என்றாலும் மார்ச் மாதத்தில் கோரப்படும் நிலக்கரி இறக்குமதி கேள்விக்கோரல் ஜூலை மாதம்வரை தாமதிக்கும்போது, மின்சாரம் அத்தியாவசிய சேவை என்பது அரசுத் தலைவருக்கு ஏன் நினைவுக்கு வரவில்லை? அதனால் இந்த ஆளும்தரப்பு யாருக்காக செயற்பட்டு வருகிறது என்பதை உணர்ந்துகொள்ள இந்த கேள்விக்கோரல் குழறுபடி மாத்திரம் போதுமானதாகும் என்றார்.

## பாதாளக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டுள்ள அரசுத்தலைவர் அநுரகுமார நேற்றுப் பிற்பகல் ஜப்பானில் வசிக்கும் இலங்கை சமூகத்தினரை டோக்கியோவில் சந்தித்து உரையாடுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூக கட்டமைப்பில் போதைப்பொருள் பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ளது. இளைஞர் யுவதிகளில் பெரும்பாலானோர் போதைப்பொருளுக்குஅடிமையாகியுள்ளார்கள். சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளில் பெரும்பாலானோர் போதைப்பொருள் மற்றும் அதனுடனான குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புப்பட்டுள்ளார்கள்.

போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாதாள குழுக்கள் கறுப்பு இராச்சியமாகவே செயற்படுகிறது.புதுக்கடை நீதிமன்றத்துக்குள் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பான விசாரணையில் நீர்கொழும்பு பொலிஸாரும், மித்தெனிய துப்பாக்கிச்சூட்டுடன் தங்காலை பொலிஸாரும் கைது செய்யப்பட்டுள்ளார். கல்கிசை பொலிஸார் பாதாள குழுக்களுக்கு ஆயுதங்களை விற்பனை செய்துள்ளார்.

பாதாளக்குழுக்களுக்கு ஆயுதங்களை விற்பனை செய்த இராணுவ அதிகாரிகள் தற்போது கைது செய்யப்பட்டு;ள்ளார்கள்.கடந்த காலங்களில் இராணுவ முகாம்களில் இருந்து டி56 துப்பாக்கிகள் வெளியில் சென்றுள்ளன.பாதாள குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்களுக்காக செயற்பட்ட அரச நிர்வாக கட்டமைப்பை முழுமையாக இல்லாதொழிப்பேன்.

பாதாள குழு உறுப்பினர்களின் கைது மற்றும் அவர்கள் வெளிப்படுத்தும் விடயங்களினால் பல அரசியல்வாதிகள் தற்போது கலக்கமடைந்துள்ளார்கள். நாட்டு மக்கள் உன்னிப்பாக இவற்றை ஆராய வேண்டும். போதைப்பொருள் மற்றும் பாதாள குழுக்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2024 ஆம் ஆண்டு நடைபெற்ற அரசுத் தலைவர்தேர்தலுக்குமுன்னர்வெளிநாடுகளில் வசிக்கும்இலங்கையர்களைசந்தித்துவிரிவான கலந்துரையாடல்களில் ஈடுபட்டோம். புதிய அரசியல் மாற்றம் ஒன்று ஏற்படுவதற்கு வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

இலங்கையின் புதிய அரசியல் மாற்றத்துக்கு வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் பிரதான பங்குதாரர்களாக உள்ளார்கள்.ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்தை நிறைவு செய்துள்ளோம். நிறைவடைந்த ஒரு வருடம் சிறந்ததா இல்லையா என்பதை எவ்வாறு ஆராய வேண்டும்.

எமது ஆளும்தரப்பு ஆட்சிக்கு வரும்போது மக்கள் மத்தியில் இருந்த எதிர்பார்ப்பை அடிப்படையாகக் கொண்டு ஆளும்தரப்பு சிறந்ததா இல்லையா என்பதை மதிப்பிட வேண்டும். இதனை விடுத்து புதிய அரசியல் மாற்றம் ஏற்படும் போது அதற்கு எதிராக இருந்தவர்களின் நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஆளும்தரப்பின் திறனை மதிப்பிட முடியாது.

நாட்டு மக்கள் எவரும் தமது தனிப்பட்ட அபிலாசைகளை முன்னிலைப்படுத்தி அரசாங்கத்தை தோற்றுவிக்கவில்லை.நாட்டை முன்னிலைப்படுத்தியே மக்கள் தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தார்கள்.மக்களின் அபிலாசைகள் வெற்றிப்பெற்றுள்ளன.

வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை ஒப்பீட்டளவில் உறுதிப்படுத்தியுள்ளோம். அது முழுமையான வெற்றியல்ல. நீண்ட பயணம் செல்ல வேண்டும்.நாட்டில் சட்டம் மற்றும் ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை உறுதிப்படுத்தியுள்ளேன். இலங்கையில் வாழும் அனைவருக்கும் சட்டம் பொதுவானது. ஏழை, செல்வந்தர் என்ற அடிப்படையில் சட்டம் செயறபடுத்தப்படமாட்டாது.

இலஞ்சம் மற்றும் ஊழலை முழுமையாக இல்லாதொழிப்பதற்கு அரச நிர்வாக கட்டமைப்பில் கடுமையான நடவடிக்கைகளை செயற்படுத்தியுள்ளேன். மக்களுக்கு வினைத்திறான வகையில் அரச நிர்வாகத்தை வழங்குவதற்கு புதிய தொழில்நுட்ப விருத்தி திட்டங்களை செயற்படுத்தியுள்ளேன். நாட்டை பொருளாதார ரீதியில் பலப்படுத்துவதற்கு உரிய அடித்தளமிடப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் போது அரசாங்கமும்,பொதுமக்களும் சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்.வரவு மற்றும் செலவுத் திட்டத்தில் காணப்படும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்துள்ளோம். எதிர்பார்க்கப்பட்ட அரச வருமானத்தை காட்டிலும் அதிகளவிலான அரசவருமானத்தை நடப்பாண்டில் பெற்றுக்கொண்டுள்ளோம்.

இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.முன்னாள் அரசுத் தலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் ஆட்சியில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழு சட்டம் கொண்டுவரப்பட்டது, 2006 ஆம் ஆண்டு பணத்தூயதாக்கல் சட்டம் இயற்றப்பட்டது. பொதுச்சொத்து சட்டத்தின் பிரகாரம் 25 ஆயிரம் ரூபாய் அரச நிதியை முறைகேடாக பயன்படுத்தினால் அந்த குற்றத்துக்கு பிணை இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.ஆகவே சட்டங்கள் கடுமையாக உள்ளன. இவை கடந்த காலங்களில் முறையாக செயற்படுத்தப்படவில்லை.

ஊழல் எதிர்ப்பு சட்டத்தை அண்மையில் பலப்படுத்தினோம். நாடாளுமன்றத்தில் சட்டங்களை இயற்றியவர்களே அவர்களின் ஆட்சியில் சட்டங்களை மீறியுள்ளார்கள்.தமக்கு எதிராக சட்டம் ஒருபோதும் செயற்படுத்தப்படாது என்று அவர்கள் எண்ணியிருந்தார்கள். சட்டம் இருந்தால் மாத்திரம் போதாது, சட்டத்தை முறையாக செயற்படுத்தும் சூழலை ஏற்படுத்த வேண்டும்.நாங்கள் அதனை செய்துள்ளோம்.

கடந்த காலங்களில் முரண்பட்டுக் கொண்டிருந்த 40 அரசியல் கட்சிகள் ஒரு அறையில் ஒன்றுக்கூடி பேசும் அளவுக்கு சட்டத்தை செயற்படுத்தியுள்ளோம்.ஆகவே இது எளிதல்ல.கடந்த காலங்களில் முரண்பட்டுக்கொண்டிருந்தவர்கள் இன்று தங்காலைக்கு செல்கிறார்கள்.

'தேர்தல் மேடைகளில் ஒருவரை ஒருவர் திருடன்என்றுவிமர்சித்துக்கொண்டோம்.அதன் விளைவையேஇன்றுஎதிர்க்கொள்கிறோம்.இனி அவ்வாறு இருக்க கூடாது' என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிடும் அளவுக்கு சட்டத்தை செயற்படுத்தியுள்ளோம்.ஊழல் எதிர்ப்புச் சட்டம் இப்போது தான் சிறந்த முறையில் செயற்படுத்தப்படுகிறது.

ஆளும்தரப்புக்கு எதிராக ஒன்றிணைந்துள்ளவர்கள் அனைவரும் வெள்ளை நிற சால்வை அணிந்த மோசடியாளர்கள்.கடந்தகாலமோசடிகளுக்குரிய பல ஆவணங்கள் வெளிநாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.எயார் லங்கா விமான கொள்வனவு முறைகேடு தொடர்பான ஆவணங்களை சிங்கப்பூரில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. அம்பாந்தோட்டைவைத்தியசாலைஅபிவிருத்தி முறைகேடு தொடர்பில் நெதர்லாந்திடமிருந்து ஆவணம் பெற வேண்டியுள்ளது.இராஜதந்திர மட்டத்தில் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

மிக் விமான கொடுக்கல் வாங்கல் முறைகேடுடன் தொடர்புடையவர்கள் தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்தார்கள். முறைகேடு தொடர்பில் ஆவணங்கள் ஏதும் இருக்குமா,தேட வேண்டும். ஒருசில ஆவணங்கள் உள்ளன.விசாரணைகளுக்கு அமைவாகவே இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. ஆகவே கடந்தகால மோசடிகளை ஒரு ஆண்டுக்குள் நிறைவுசெய்யமுடியாது.எதிர்க்கட்சியினர்தான் சட்டத்துக்கு தற்போது அச்சமடைந்துள்ளார்கள் - என்றார்.

மேலும் 20 பேர் வெளிநாடு;களில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் விரைவில் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர். பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையில் சுமார் 30 000 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்தோடு பொலிஸ் அதிகாரிகளின் சிரேஷ்ட நிலைகளுக்கமைய பதவியுயர்வுகளும் வழங்கப்படுகின்றன.

இதில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கும் கட்டம் கட்டமாக தீர்வு வழங்கப்படும். நாட்டில் இடம்பெறும் குற்றச் செயல்கள் தொடர்பில் எந்தவொரு பிரஜையும் தாம் அறிந்த தகவல்களை எவ்வித பயமும் இன்றி பொலிஸாருக்கு தெரிவிக்க முடியும். தகவல் வழங்குபவர்களின் தனித்துவத்தன்மை பாதுகாக்கப்படும்என்பதோடு அவை தொடர்பில் துரித நடவடிக்கையும் எடுக்கப்படும். அரசியல் பழிவாங்கல்களை முன்னெடுப்பதற்கான எந்தவொரு அவசியமும் ஆளும்தரப்புக்கு இல்லை. அவ்வாறான அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்காகவே நாம் ஆட்சியதிகாரத்தைப் பெற்றுள்ளோம். நீதிமன்றத்தின் உத்தரவுக்கமையவே பொலிஸார் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றனர். இதில் எந்த சந்தர்ப்பத்திலும் அரசியல் பழிவாங்கல் இடம்பெறவில்லை என்றார்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.09.2025இல் வெளியிடப்பெற்றது